

# குத்பதுல் ஹாஜா

தொகுப்பு

அல்கோபார் அழைப்பகம், தமிழ்ப் பிரிவு

جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالخبر

# குத்பதுல் ஹாஜா



إِنَّ الْحَمْدَ لِلَّهِ نَحْمَدُهُ وَنَسْتَعِينُهُ وَنَسْتَغْفِرُهُ وَنَعُوذُ
بِاللَّهِ مِنْ شُرُورِ أَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ أَعْمَالِنَا مَنْ يَهْدِهِ اللَّهُ فَلاَ
مُضِلَّ لَهُ وَمَنْ يُضْلِلْ فَلاَ هَادِيَ لَهُ وَأَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاَّ اللَّهُ وَحْدَهُ
لاَ شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ

இன்னல்ஹம்தலில்லாஹி நஹ்மதுஹு வநஸ்தஈனுஹு வநஸ்தஃபி(f)ருஹ், வநவூது பில்லாஹி மின் ஷுரூரி அன்பு(f)ஸினா வமின் ஸய்யிஆத்தி அஃமாலினா, மய்யஹ்தி ஹில்லாஹு ப(f)லா முழிள்ளலாஹ், வமய் யு(dh)ழ்லில் ஃபலா ஹாதியலஹ், வ அஷ்ஹது அல்லா இலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லா ஷரீகலஹு வ அஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துஹு வரஸூலுஹ்

நிச்சயமாக எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே. அவனையே நாம் புகழ்கிறோம். அவனிடமே நாம் உதவி தேடுகிறோம். நம்முடைய மன இச்சைகளின் கெடுதிகளை விட்டும், நம்முடைய செயல்களின் தீமைகளை விட்டும் அல்லாஹ்விடம் பாதுகாவல் தேடுகிறோம். யாருக்கு அல்லாஹ் நேர்வழி காட்டுவானோ, அவரை வழிகெடுப்பவர் யாரும் இல்லை. யாரை அல்லாஹ் வழிகேட்டில் விட்டுவிடுவானோ, அவரை நேர்வழியில் செலுத்துபவர் யாரும் இல்லை. இன்னும், நான் சாட்சி சொல்கிறேன்: ‘அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் யாரும் இல்லை. அவன் தனித்தவன். அவனுக்கு இணையேதுமில்லை. மேலும், நான் சாட்சி சொல்கிறேன். நிச்சயமாக முஹம்மது(ﷺ) அவர்கள் அவனுடைய அடியாரும் அவனுடைய தூதரும் ஆவார்.

முஸ்லிம் 1576, இப்னுமாஜா 1892

# குத்பதுல் ஹாஜா

2/5

يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُوا۟ ٱتَّقُوا۟ ٱللَّهَ حَقَّ تُقَاتِهِۦ

وَلَا تَمُوتُنَّ إِلَّا وَأَنتُم مُّسْلِمُونَ

யா அய்யுஹல்லதீன ஆமனுத்தகுல்லாஹ

ஹக்கதுகாதிஹி வலா தமூதுன்ன

இல்லா வஅன்தும் முஸ்லிமூன்

நம்பிக்கை கொண்டோரே! நீங்கள்
அல்லாஹ்வை அஞ்ச வேண்டிய முறைப்படி
அஞ்சுங்கள். மேலும் முஸ்லிம்களாக
அன்றி நீங்கள் மரணிக்காதீர்கள்.

திருக்குர்ஆன் 3:102

# குத்பதுல் ஹாஜா 3/5

يَاَيُّهَا النَّاسُ اتَّقُوْا رَبَّكُمُ الَّذِىْ خَلَقَكُمْ
مِّنْ نَّفْسٍ وَّاحِدَةٍ وَّخَلَقَ مِنْهَا زَوْجَهَا وَبَثَّ
مِنْهُمَا رِجَالًا كَثِيْرًا وَّنِسَآءً ۚ وَاتَّقُوا اللّٰهَ الَّذِىْ
تَسَآءَلُوْنَ بِهٖ وَالْاَرْحَامَ ؕ اِنَّ اللّٰهَ كَانَ عَلَيْكُمْ رَقِيْبًا

**யா அய்யுஹன்னாஸுத்தகூ ரப்பகுமுல்லதீ கலககும் மின் நப்(f)ஸிவ் வாஹிததிவ் வகலக மின்ஹா ஸ(Z)வ்ஜஹா வபஸ மின்ஹுமா ரிஜாலன் கஸீரவ் வநிஸாஅ வத்தகுல்லாஹல்லதி தஸாஅலூன பிஹி வல்அர்ஹாம். இன்னல்லாஹ கான அலைக்கும் ரகீபா**

மனிதர்களே! உங்கள் இறைவனுக்குப் பயந்து நடந்து கொள்ளுங்கள், அவன் உங்கள் யாவரையும் ஒரே ஆத்மாவிலிருந்து படைத்தான், அவரிலிருந்தே அவர் மனைவியையும் படைத்தான். பின்னர் இவ்விருவரிலிருந்து, அநேக ஆண்களையும் பெண்களையும் பரவச் செய்தான். ஆகவே, அல்லாஹ்வுக்கே பயந்து கொள்ளுங்கள்; அவனைக்கொண்டே நீங்கள் ஒருவருக்கொருவர் (தமக்குரிய உரிமைகளைக்) கேட்டுக் கொள்கிறீர்கள். மேலும் (உங்கள்) இரத்தக் கலப்புடைய உறவினர்களையும் (ஆதரியுங்கள்). நிச்சயமாக அல்லாஹ் உங்கள் மீது கண்காணிப்பவனாகவே இருக்கின்றான்.

**திருக்குர்ஆன் 4:1**

# குத்பதுல் ஹாஜா 4/5

يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُواْ ٱتَّقُواْ ٱللَّهَ وَقُولُواْ قَوۡلٗا سَدِيدٗا ٧٠
يُصۡلِحۡ لَكُمۡ أَعۡمَٰلَكُمۡ وَيَغۡفِرۡ لَكُمۡ ذُنُوبَكُمۡۗ
وَمَن يُطِعِ ٱللَّهَ وَرَسُولَهُۥ فَقَدۡ فَازَ فَوۡزًا عَظِيمًا ٧١

யா அய்யுஹல்லதீன ஆமனுத்தகுல்லாஹ வகூலூ கவ்லன் ஸதீதா, யுஸ்லிஹ்லகும் அஃமாலகும் வ யக்(gh)பி(f)ர்லகும் துனூபகும் வமய் யுதிஇல்லாஹ வரஸூலஹு ப(f)கத் பா(f)ஸ(Z) ப(f)வ்ஸ(Z)ன் அழீமா

ஈமான் கொண்டவர்களே! நீங்கள் அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். நேர்மையான சொல்லையே சொல்லுங்கள். அவன் உங்களுடைய காரியங்களை உங்களுக்குச் சீராக்கி வைப்பான். உங்கள் பாவங்களை உங்களுக்கு மன்னிப்பான். அன்றியும் அல்லாஹ்வுக்கும் அவன் தூதருக்கும் எவர் வழிப்படுகிறாரோ, அவர் மகத்தான வெற்றி கொண்டு விட்டார்.

திருக்குர்ஆன் 33: 70,71

# குத்பதுல் ஹாஜா 5/5

أَمَّا بَعْدُ، فَإِنَّ أَصْدَقَ الْحَدِيثِ كِتَابُ اللَّهِ، وَأَحْسَنَ الْهَدْيِ هَدْيُ مُحَمَّدٍ،
وَشَرُّ الْأُمُورِ مُحْدَثَاتُهَا، وَكُلُّ مُحْدَثَةٍ بِدْعَةٌ وَكُلُّ بِدْعَةٍ ضَلَالَةٌ،
وَكُلُّ ضَلَالَةٍ فِي النَّارِ

அம்மா பஅத், ப(f)இன்ன அஸ்தகல் ஹதீஸி கிதாபுல்லாஹ், வ அஹ்ஸனல் ஹத்யி ஹத்யு முஹம்மதின் வஷர்ருல் உமூரி முஹ்தசா(த்)துஹா, வ குல்லு முஹ்தச(த்)தின் பித்ஆ, வ குல்லு பித்அத்தின் ழளாலா, வ குல்லு ழளாலத்தின் பி(f)ன் நார்.

அம்மா பஅத் (இறைவாழ்த்துக்குப் பின்!) உரைகளில் சிறந்தது அல்லாஹ்வின் வேதம் (குர்ஆன்) ஆகும். வழிகாட்டலில் சிறந்தது முஹம்மத்(ﷺ) அவர்களின் வழிகாட்டலாகும். செயல்களில் தீயவை (மார்க்கத்தின் பெயரால்) புதிதாக உண்டாக்கப் படுபவை ஆகும். (மார்க்கத்தின் பெயரால் புதிதாக உருவாக்கப்படும்) ஒவ்வொரு புதுமையும் வழிகேடு ஆகும். ஒவ்வொரு வழிகேடும் நரகத்தில் கொண்டு சேர்க்கும்.

முஸ்லிம் 867, நஸாயீ 1578